திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, பெட்ரோலில் ஓடக்கூடிய ஜீப் ஒன்றை டீசலில் ஓடக்கூடிய ஜீப்பாக மாற்றுவதற்கு எவ்வளவு செலவாகிறது? டீசலில் ஓடக்கூடிய எஞ்சின் உள்ள ஜீப்பை விலைக்கு வாங்கினல் எவ்வளவு கூடுதல் தொகை ஆகும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : குறைந்தபட்சம் 18,000 ரூபாயிலிருந்து 23,000 ரூபாய் வரை ஆகும். அதைவிட எவ்வளவு சிக்கனமான முறையில் செயல்படுத்த முடியும் என்பது பற்றிய ஆய்வு நடந்து வருகிறது.

ஆரணி—பெங்களூர் விரைவுப் பேருந்துப் பணி

* வினு எண் 93—திரு. வீ. அர்ச்சுனன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :

ஆரணிக்கும் பெங்களூருக்கும் இடையே விரைவுப் பேருந்துப் பணியினைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இல்லை.

கெலமங்கலம், தளி பகுதிகளுக்குச் சிறப்புத் திட்டம்

* வினு எண் 94—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் தருமபுரி மாவட்டம், கெலமங்கலம், தளி ஆகிய பகுதியைத் தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்ய மத்திய அரசு ரூபாய் ஒரு கோடித் திட்டம் தீட்டியுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) எப்போது முதல் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ), (ஆ) கெலமங்கலம் தளி ஆகிய பகுதிகள் உள்ளிட்ட தர்மபுரி மாவட்டத்தில் (முழுவதும்) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தினை ரூ. 103.19 லட்சம் செலவில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு சிபாரிசு செய்தது. மேற்படித் திட்டத்தை ரூ. 69.665 லட்சம் செலவில் செயல்படுத்த 23-3-1978-ல் இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத் திட்டம் தர்மபுரி மாவட்ட மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இவ்வாண்டு ஏப்ரல் திங்களிலிருந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது.

1978 செப்டம்பர் 8]

1 டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் கீழ் என்னென்ன தொழில்கள் அல்லது என்னென்ன வாய்ப்புகள் உருவாக்கப்பட இருக்கின்றன? அங்கே செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் ஏற்படுத்த அதிலிருந்து எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இத் திட்டத்தின் மூலம் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட உள்ளன. அந்தத் திட்டங்களை எல்லாம் படித்தால் நேரம் போதாது. ஆனாலும் செயற்கைக் கருத்தரிப்பு மூலம் கலப்பு இனத்தை உருவாக்க 19,93,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடத் தலைவர்கள் மாநாடு

* வினா எண் 95—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் உள்ள கிரீன்வேஸ் ரோட் அலுவலகத்தில் 1977 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 12, 13, 14 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஒழுங்குமுறை விற்பனைக்குழுத் தலைவர்கள், செயலாளர்கள் கூட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனை சம்பந்தமாக என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விவர அறிக்கை* அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விற்பனை செய்வதன் காரணமாக விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கிறது. ஆகவே, கமிஷன் மண்டிக்கடைக்காரர்கள் மூலம் விற்பனை செய்வதை நிறுத்திவிட்டு, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலமாகவே விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மூலக் கேள்வி 12, 13, 14 தேதிகளில்-டிசம்பர் மாதத்தில்-நடைபெற்ற ஒழுங்குமுறை விற்பனைக்குழுத் தலைவர்கள், செயலாளர்கள் கூட்டத்தில் ஒழுங்குமுறை விற்பனை சம்பந்தமாக என்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்பது. ஆனால் உறுப்பினர் அவர்கள் வேறு ஒரு கேள்வியைக் கேட்கிறார்கள். நாளை இந்த அவையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட சட்டம் வர இருக்கிறது. அதன்மீது பேசும்போது உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னால் தகுந்த பதில் சொல்கிறேன்.

[* 894ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.]